# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண் 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முறையீட்டு மனு எண்: 532/2016/TPT-2**

**ஆணை எண் : 115/2017**

**நாள் : 10.05.2017**

திரு. கு. இரா. ஜோதி,
21, சாந்தி நகர், குறிஞ்சிப்பாடி,
கடலூர் மாவட்டம் - 607 001.

– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
குறிஞ்சிப்பாடி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

– எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், 21, சாந்தி நகரை சேர்ந்த திரு. கு. இரா. ஜோதி என்பவரின் 29.12.2012 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க. எண்.4113/2013/இ2 நாள்.01.06.2016–ன் வழியாக இம்முறை மன்றத்திற்கு அனுப்பப்பட்டு 09.06.2016 அன்று பெறப்பட்டது. இந்நிகழ்வு அரசால் இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், 2014 – ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (1)–ன்படி தாக்கல் செய்யப்பட்ட முறையீடாகக் கருதி, முறையீட்டு மனுதாரரின் மனு முறையீட்டு எண்.532/2016 ஆக பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது–

## ஆணை

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், 21, சாந்தி நகரைச் சேர்ந்த திரு. கு. இரா. ஜோதி என்பவர் தனது 29.12.2012 நாளிட்ட முறையீட்டு மனுவில், குறிஞ்சிப்பாடி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. முத்துலிங்கம், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் தானே புயலால் பாதிக்கப்பட்ட

குறிஞ்சிப்பாடி பேரூராட்சி 16-வது வார்டில் வழங்கிய நிவாரணத் தொகை மற்றும் ஆவணம் போன்ற விவரங்களை பொது தகவல் அலுவலரிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியதாகவும் அதற்கு பொது தகவல் அலுவலர், உள்நோக்கத்துடன் உண்மைகளை மறைத்து, தவறான தகவல் கொடுத்துள்ளதால், மேற்படி சட்டம், பிரிவு விதி 19 (1) ன் கீழ் மேல் முறையீடு செய்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சட்டம் மற்றும் விதிகளின் படி சமர்பிக்கவில்லை. மேலும் உரிய விதிகளின்படி ரூபாய் 10/-க்கான நீதி மன்ற வில்லை ஒட்டிய படிவம் 1 - ஐ பூர்த்தி செய்து அனுப்பக் கோரியும், அவ்வாறு அனுப்பவில்லை. இருப்பினும் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக 22.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எனினும் அன்றைய தேதியில் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் சரியான பதில் அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு கூறியுள்ளார். அதற்கான மேல் முறையீட்டு மன்றம் இந்த அமைப்பு அல்ல. எனவே இம்முறையீட்டு மனு இம்முறை மன்ற விசாரணைக்கு உகந்தது அல்ல எனக் கருதி, தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. கு. இரா. ஜோதி,
21, சாந்தி நகர், குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம் - 607 001.

செயல் அலுவலர்,
குறிஞ்சிப்பாடி பேரூராட்சி,
குறிஞ்சிப்பாடி - 607 303,
கடலூர் மாவட்டம்.